## மூதூர் பிரதேச சபை

## திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 26 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2019 மே 06 ஆம், 2019 மே 31 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் மூதூர் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

| கணக்கு விடயம் | பெறுமதி ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| முற்பண மீதிகள் | 11,139,745 | முற்பணப் பதிவேடு | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ரூபா 11,139,745 தொகையான முற்பண மீதி தொடர்பான முற்பணப் பதிவேடு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என தங்களின் வரைபில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதில் பெருமளவான |

| | | | |
|---|---|---|---|
| | | | தொகையானது நீண்ட காலமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டு வருவதுடன் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னருள்ள முற்பணக் கணக்கு தொடர்பான விபரங்களை 2006 ஆம் ஆண்டு மூதூரில் ஏற்பட்ட வன் செயலின் காரணமாக பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதோடு இனிவரும் காலங்களில் முற்பணக் கணக்கு தொடர்பான அனைத்து விடயங்களும் பூரணப்படுத்தப்பட்டு தங்களின் கணக்காய்வு நடவடிக்கைக்கு சமர்ப்பிக்கப்படும் |

1.4 இணங்காமைகள்

-----------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் பிரிவு 571 | 03 தொடக்கம் 04 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா. 37,300 தொகையான ஏனைய வைப்புக்கள் நிதிப் பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 03 தொடக்கம் 04 வருடங்களுக்கு மேற்பட்ட (2015-2016) ரூபா.37,300 தொகை சபைத் தீர்மானத்திற்கு இணங்க வருமாத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் X<br>i) பிரிவு 191 | மாதாந்த சபைக் கூட்டறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சபைக் கூட்டறிக்கையினை மாதாந்தம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | கடந்த 2019.01.17ம் திகதியிலிருந்து மாதாந்தம் நடைபெற்ற சபைக்கூட்டத் தீர்மானங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அனுப்பி வைக்கப்படுவதுடன், எதிர்வரும் காலங்களில் மாதாந்தம் தீர்மானத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். |
| ii) பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | கடந்த 2018ம் ஆண்டுக்கான இம்முரண்பாட்டுக்கான விளக்கக்கூற்று தயாரிக்கப்பட்டு ஏற்பட்ட முரண்பாடுகள் இனம்காணப்படுவதுடன், அவை எதிர்வரும் காலங்களில் திருத்தியமைக்கப்படும். |
| இ) மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம் பிரிவு 203 | ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்படுதல் வேண்டும். எனினும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 09 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஆண்டு தோறும் வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்படுதல் வேண்டும். | குறித்த வாகனங்களுக்கான ஆவணங்கள் அன்பளிப்பாக வழங்கிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாமையினால் இவ்வாகனங்களுக்கான வருமான உத்தரவுப் பத்திரங்களைப் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. எனது MUPS/WP/RMP/2017 ஆம் இலக்க, 25.10.2017 ஆம் திகதிய கடிதம் மூலம் மோட்டார் வாகனப் |

போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கடிதம் மூலம் இவ் வாகனங்களுக்கான ஆவணங்கள் கோரியும் அவை கிடைக்கப் பெறாமலுள்ளது. கடந்த 2018ம் அண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 03 வாகனங்களுக்கான உரிமை மாற்றப் படிவம் கையொப்பமிட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 12,170,412 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 103,812 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பாதீடு<br>--------<br>ரூபா<br>"000" | ஆண்டுக்கான வருமானம்<br>--------------<br>ரூபா<br>"000" | பெறப்பட்ட வருமானம்<br>---------------<br>ரூபா<br>"000" | 2018.12.31 இல் நிலுவை<br>---------------<br>ரூபா<br>"000" | பாதீடு<br>--------<br>ரூபா<br>"000" | ஆண்டுக்கான வருமானம்<br>----------------<br>ரூபா<br>"000" | பெறப்பட்ட வருமானம்<br>-----------<br>ரூபா<br>"000" | 2017.12.31 இல் நிலுவை<br>-----------<br>ரூபா<br>"000" |
| வீதவரிகள் | 850 | 850 | 422 | 428 | 806 | 816 | 460 | 346 |
| வாடகை | 17,295 | 14,512 | 14,014 | 3,281 | 11,960 | 9,477 | 11,057 | 902 |
| அனுமதி பத்திர கட்டணம் | 1,398 | 1,369 | 1,180 | 218 | 1,075 | 1,398 | 1,043 | 32 |

(அ) மீளாய்வாண்டில் வீதவரி நிலுவை கடந்த வருடத்தை விட ரூபா 82,000 தொகையால் ஆல் அதிகரித்துள்ளது. இது வீதவரி அறவீட்டில் மந்த நிலைமையைக் காட்டுகின்றது. மேலும் வாடகை மற்றும் அனுமதிக் கட்டணங்கள் முறையே ரூபா 2,379,000 மற்றும் ரூபா 186,000 தொகையால் அதிகரித்துள்ளமை அவ்வருமானங்களின் அறவீடு மந்தகதியில் நடைபெற்றுள்ளது என்பதை காட்டுகிறது.

### 2.2.2 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமையசபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 6,213,099 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வீத வரி நிலுவையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் வீதவரிகள் நிலுவையானது கடந்த வருடத்தைவிட ரூபா. 82,000 தொகையால் அதிகாரித்து காணப்பட்டமைக்கு பின்வரும் காரணங்கள்<br><br>• ஆதனவரி அறவீடானது கடந்த வருடத்தை விட மீளாய்வாண்டில் குறைவடைந்துகாணப்படுகின்றது. எமது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதகளவிலான காணிகள் நபர்களிடையே கைமாற்றப்பட்டதாலும், பெயர் மாற்றம்செய்யப்படாமையினாலும் காணி சொந்தக்காரர்களை |

| | | |
|---|---|---|
| | | இனங்காண முடியாதுள்ளதுடன் ஆதனவரி அறவீடு செய்வதிலும் பெரும் சிரமங்களை எதிரநோக்க வேண்டியுள்ளதுடன், தற்போது ஆதன வரி நிலுவை அறவீடு செய்வதற்கான விசேட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இந்நிலுவைகள் அறவீடு செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |

2.2.3 வாடகை வருமானம்
-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ) பஸ் தரிப்பு நிலையக்கடை வாடகை வருமானம்<br>புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா.22,820,738 கிரயத்திற்கு 2013 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 40 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியை 2014 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கியமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 173 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்டே கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய 40 கடைகளில் 33 கடைகளுக்கே உடன்படிக்கை செய்யப்பட்டு குத்தகைக் காலம் | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்படாத கடைகளுக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் உடன்படிக்கை மேற்கொள்ளும் போது குத்தகைக் காலம் குறிப்பிடப்படல் வேண்டும். | குறித்த காலப்பகுதிக்குள் பாதுகாப்பு வைப்பினை செலுத்தத் தவறிய 7கடைகளுக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது வரை 38 கடைகளுக்கான பாதுகாப்பு வைப்பு பணம் பெறப்பட்டுள்ளதுடன் இற்றை வரையான நிலுவைகள் அறவிட்டு அவர்களுக்கான |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்படாமல் நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | | ஒப்பந்தத்தினை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இவ் (2018ம்) ஆண்டு இக்கடைகளுக்கான முன்னைய நிலுவைகள் பகுதி பகுதியாக அறவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |
| (ii) | வழங்கப்பட்ட கடைகள் தொடர்பாக 2014 சனவரி 01 தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2018 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டிய ரூபா.1,247,630 பெறுமதியான வாடகைப்பணத்தைஅறவிட சபை நடைவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாடகை நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் எதிர்வரும் காலங்களில் வாடகை நிலுவை ஏற்படாத வண்ணம் வாடகையை அறவிடப்பட வேண்டும். | வாடகை நிலுவை பகுதிபகுதியாக அறவிடப்பட்டுக் கொண்டிருப்பதுடன் தவறுநர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். உடன்படிக்கை பிரிவு 2இன் பிரகாரம் ஆண்டுதோறும் வாடகைப் பெறுமதியில் 10% அதிகரித்து அறவிட கட்டம்கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | உடன்படிக்கையின் பிரிவு 6 இன் பிரகாரம் செலுத்த வேண்டிய வாடகையை செலுத்தத் தவறும் ஒப்பந்தக்காரருக்கு அவர்கள் மீது மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு சபைக்கு உரிமை காணப்பட்டிருந்த போதிலும் எவ்வித நடவடிக்கையினையும் இன்று வரை சபை எடுத்திருக்கவில்லை. | வாடகை செலுத்தத் தவறுபவர் மீது ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (iv) | உடன்படிக்கையின் பிரிவு 2 இன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டு தோறும் வாடகைப் பெறுமதியில் 10% அதிகரிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்தும் இன்று வரை இவ் அதிகரிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் பிரகாரம் 10% அதிகரிப்பு அதிகரிக்கப்பட்டு வாடகை அறவிட நடவடிக்கை எடுப்பதுடன் அதிகரிப்பு ஏற்படுத்தப்படாத கடந்த ஆண்டுகளுக்கான தொகையினைக் கணிப்பீடு செய்து வாடகை நிலுவைகளுடன் சேர்க்கப்பட வேண்டும். | |

| | | |
|---|---|---|
| ஆ) நாவலடி சந்தி கடைத்தொகுதியை வாடகைக்கு வழங்குதல்.<br>-----------------------------------------------------<br>நாவலடி சந்தி கடைத்தொகுதியை வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்ட போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 173 ஆம் பிரிவின் பிரகாரம், சபையினால் 2016 ஆம் ஆண்டு வாடகைக்கு வழங்கப்படட 06 கடைகளிற்கும் இன்று வரை உடன்படிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக உரிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட முடியாமல் போகலாம். | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்படாத கடைகளுக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இக்கடைகளுக்கான ஒப்பந்தம் உடனடியாக மேற்கொள்வதுடன், வாடகை நிலுவையும் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) இக் கடைகளிற்கான வாடகை நிலுவை மீளாய்வாண்டு வரை ரூபா 185,400 தொகையாக காணப்பட்ட போதிலும் இவ் நிலுவைத் தொகையை கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 21 ஆம் திகதிவரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் எதிர்வரும் காலங்களில் வாடகை நிலுவை ஏற்படாத வண்ணம் வாடகையை அறவிடப்பட வேண்டும். | இக்கடைகளுக்கான ஒப்பந்தம் உடனடியாக மேற்கொள்வதுடன், வாடகை நிலுவையும் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| இ) அலுவலக கடைத்தொகுதி வாடகை நிலுவை<br>-----------------------------------------------------------<br>அலுவலக கடைத்தொகுதியில் காணப்படும்14 கடைகளுக்கான வாடகை நிலுவை ரூபா 914,894 தொகையாக காணப்பட்ட போதிலும் இவ் நிலுவைத் தொகையை கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 21 ஆம் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவை அறவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டப்படுவதுடன் மேலும் எதிர்வரும் காலங்களில் வாடகை நிலுவை ஏற்படாத வண்ணம் வாடகையை அறவிடப்படல் வேண்டும். | அலுவலக கடைத்தொகுதிக்கு 20 மாதகால பாதுகாப்பு வைப்புத் தொகை செலுத்தப்படுள்ளது. இத்தொகையை அதிகரிக்காதவகையில் மாதாந்த வடகை நிலுவை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

ஈ) சந்தைக்கடை வருமானம்

| | | |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 82 சந்தைக் கடைகளை வாடகைக்கு வழங்கியமை தொடர்பான கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 173 ஆம் பிரிவின் பிரகாரம், சபையினால் 20 வருடங்களுக்கு முன்பு வாடகைக்கு வழங்கப்பட்ட 82 கடைகளிற்கும் இன்று வரை உடன்படிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்படாத கடைகளுக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தங்களால் குறிப்பிட்டதன் படி மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரதிகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டப்படுகிறீர். | மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமலுள்ளதால் அதனைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும். |
| (ii) இக்கடைகளிற்கான வாடகை நிலுவை மீளாய்வாண்டு வரை ரூபா 1,591,692 தொகையாக காணப்பட்ட போதிலும் இவ் நிலுவைத் தொகையை கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 21 ஆம் திகதிவரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் எதிர்வரும் காலங்களில் வாடகை நிலுவை ஏற்படாத வண்ணம் வாடகையை அறவிடப்பட வேண்டும். | 2019.04.30 வரை ரூபா.86290.00 நிலுவை அறவிடப்பட்டுள்ளது. இத்தொகை ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்பட்டாலும் மிக விரைவாக குறித்த காலக்கெடு வழங்கப்பட்டு முழுத்தொகையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், காலக்கெடுவுக்குள் நிலுவை செலுத்தாத கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| | வாடகை பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | எமது அலுவலக வருமான மேற்பார்வையாளர்களைக் கொண்டு கடைகளின் அளவுக்கேற் றவாறு தற்காலிக வாடகை நிர்ணயிக்கப்பட்டு வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேறகொள்ளப்படும். |
| (iii) இப்பிரதேசத்தில் தற்போது நிலவும் வாடகைப் பெறுமதி குறைந்தது ரூபா 3,000 தொடக்கம் ரூபா 5,000 தொகையாக காணப்பட்ட போதிலும் சபையானது 20 வருடங்களுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 150 தொடக்கம் ரூபா 500 தொகையினையே இன்று வரை வாடகைப் பெறுமதியாக நிர்ணயித்துள்ளது. | உப குத்தகை வழங்கியவர்கள் மீது உரிய முறையில் சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளப்படல் வேண்டும். | சகல கடைகளும் பரீட்சிக்கப்பட்டு இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| (iv) இக் கடைகளில் 30 கடைகளை மாதிரிச் செவ்வை மூலம் தெரிவு செய்து பரிசீலனை செய்யப்பட்ட போது கடைகளைப் பெற்ற வாடகைதாரர்களில் 15 பேர் அக்கடைகளை மாதாந்த வாடகையாக ரூபா 700 தொடக்கம் ரூபா 4,500 பெறுமதிக்குஉப குத்தகைக்கு வழங்கியிருந்தமை அவர்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்து மூல உறுதிப்படுத்தல்கள் மூலம் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது. | | |
| உ) இறைச்சிக் கடை குத்தகை வருமானம்<br>-----------------------------------------------------<br>இறைச்சிக்கடைகுத்தகையாளர்கள் குத்தகையை செலுத்தத் தவறும் போது அவர்களது பாதுகாப்பு வைப்பிலிருந்து குத்தகைத் தொகையை அறவிடாமல் வருட இறுதியிலே இந்நடைமுறை பின்பற்றப்படுவதனால் ரூபா 8,297,399 தொகையான நிலுவை நிலுவைகள் அறவிடப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. மேலும் இந் நிலுவைகளுக்கு சபையினால் காலப்பகுப்பாய்வை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | அறவீடு செய்யப்படக்கூடிய நிலுவைகள் அனைத்தும் அறவீடு செய்யப்படுவதுடன் ஏனையவை தொடர்பாக உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்த 2017ம் ஆண்டு ஆரம்பத்தில் ரூபா 10,142,162 இறைச்சிக் கடை குத்தகை வருமான நிலுவையாக காணப்பட்ட போதிலும் 2017ம் ஆண்டு முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவைகளில் சுமார் ரூபா 1,839,008 அறவிடப்பட்டு நிலுவையானது 2017ம் ஆண்டு இறுதியில் ரூபா 8,303,154 ஆக குறைக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வு ஆண்டின் (2018) தற்போது நிலுவையானது 8,297,399 ஆக குறைவடைந் துள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள்மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### அ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைவதற்குத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 1,115,226 தொகை செலவில் 2016 திசெம்பர் 07 ஆம் திகதி நிர்மாணிக்கப்பட்ட எரிவாயுக் கட்டிடத்தில் இன்று வரை எரிவாயு தயாரித்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எரிவாயு தயாரித்துப் செயல்முறையினை ஆரம்பிற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | Isuri Bio Construction நிறுவன நிபுணத்துவரான K.M.C.W.B. விக்ரமதிலக அவர்களால் கடந்த 2018.10.13ம் திகதி எமது சபைக்குச் சொந்தமான அறுவைச்சாலை பார்வையிடப்பட்டு அதில் உயிர்வாயு தயாரிக்கப்படுவதாக உறுதி செய்யப்பட்டு கடிதம்மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதனை பயன்படுத்துவதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும். |
| 2) சம்பூர் பிரதேசத்தில் புறநெகும செயற்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 4,094,702 செலவில் 2017 ஆம்ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட தாய் சேய் பராமரிப்பு நிலையம் குறித்த தேவைக்குப் பயன்படுத்தாது சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான கட்டடங்களையும் பொருட்களையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும், காவலாளி ஆளணி குறைவாக உள்ளதையும் கருத்திற்கொண்டு சம்பூர் தாய்சேய் பராமரிப்பு நிலையத்தை பராமரித்துப் பாதுகாப்பதற்காகவும் மேற்பார்வை செய்வதற்காகவும், தாய்சேய் பராமரிப்பு செயற்பாடு |

| | | |
|---|---|---|
| | | இடம்பெறும்போது மூதூர் சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கமைவாக பொது மக்களுக்குத் தேவையான வசதிகளையும், முன்னேற்பாடுகளையும் செய்து வழங்குவதற்காகவும் சம்பூர் விநாயகர் சனசமுக நிலையத்திற்கு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையத்திற்கு அண்மையில் சுமார் 500மீற்றர் தொலைவில் நீண்ட காலமாக தாய்சேய் பராமரிப்பு நிலையம் இயற்கி வருவதால் எமது நிலையத்தை பராமரிப்பதற்கான ஆளணி பற்றாக்குறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் காணப்படுவதால் இந்நிலையத்தை இயக்க முடியாதுள்ளது. விரைவாக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரியூடாக குறித்த நோக்கம் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபையினால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக பொருத்தமான அறிவினைகொண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான இலக்குகளை இனங்கண்டு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக அதன்நோக்கம் மற்றும் இலக்குகள் பற்றிய தெளிவைப் பெற்று விரைவாக கருமமாற்றப்படும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ஒரு செயற்பாடற்ற வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 55,351 மீதி 11 வருடங்களாக காணப்பட்ட போதிலும் அக்கணக்கினை வருமானம் உழைக்கக்கூடிய வகையில் மாற்றுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 21 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானம் உழைக்கக்கூடிய வகையில் வங்கிக் கணக்கினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2004ஆம் ஆண்டு விசேட ஆணையாளரின் காலப்பகுதியில் திருகோணமலை இலங்கை வங்கி பிரதான கிளையில் திறக்கப்பட்ட நடைமுறைக் கணக்காகும். மூதூர் கிளையில் கணக்கு திறக்கப்பட்டதன் பின்னர் குறித்த நடைமுறைக் கணக்கு பயன்படுத்தப்படாமல் உள்ளது. இக்கணக்கிலுள்ள ரூபா. 55,351.69 மீதி தற்போது நடை முறைக்கணக்கிற்கு மாற்றுவதற்கு கடந்த 2018.08.16 திகதிய 150ம் இலக்க சபைத் தீர்மானத்திற்கிணங்க எனது MUPS/Acct/FD-01/BA/2018ம் இலக்க 2018.09.25ம் திகதிய கடிதம்மூலம் முகாமையாளர், இலங்கைவங்கி, திருகோணமலை எனும் முகவரிக்கு இவ்விடயம் சம்பந்தமாக நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும், ஆலோசனைகளை வழங்கி உதவுமாறும் கோரப்பட்டுள்ளது. இதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| ஆ) | யுனிசெப் நிறுவன நிதி உதவித்திட்டத்தின் கீழ் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேறிய 03 பயனாளிகளுக்கு நீர் இணைப்பு வசதிகளை வழங்குவதற்கு ரூபா 11,344 தொகை 2016 திசெம்பர் 25 ஆந் திகதி செலுத்தப்பட்ட போதிலும் இன்று வரை நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட்ட கட்டணத்தை மீள அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்காது நீர் இணைப்பினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்த 2018ம் ஆண்டு உடனடியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பயனாக 2018.07.23ம் திகதி 12 பயனாளிகளுக்கு நீரிணைப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், மீதி 03பயனாளில் நீரிணைப்பு வழங்கப்படவில்லை. கடந்த ஆண்டு இவர்களுக்கு நீரிணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும் வீதி அகலப்படுத்தல், வீதியில் காணப்பட்ட கல்வெட்டு, |

| | | |
|---|---|---|
| | | சுற்றுவேலிகளை பிரித்து நீர்க்குழாய் பதிப்பதற்காக வழிவிடல் போன்றவற்றால் ஏற்பட்ட இடையூறு காரணமாக நீரிணைப்பு வழங்கப்படவில்லை. தற்போதும் இப்பிரச்சினை காணப்படு வதால் நீரிணைப்பு வழங்குவதற்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை மீளெடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நீரிணைப்பு வழங்குங்கும்போது இக்கொடுப்பனவு மீள வழங்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| இ) 2019 ஆம் ஆண்டு முதல் அரையாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட கோழி இறைச்சியின் விற்பனை விலை ரூபா 400 ஆக காணப்பட்ட போதிலும் சபையின் எல்லைக்குள் காணப்படும் கோழி இறைச்சிக் கடைகளில் ஒரு கிலோகிராம் ரூபா 570 தொகைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இது தொடர்பாக சபையினால் எவ்வித நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படவில்லை. | நிர்ணய விலையில் கோழி இறைச்சியினை வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், தவறும் கடை உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கோழி இறைச்சி விற்பனைத் தொகை தொடர்பாக மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஈ) இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6, மற்றும் 4 ஆம் பிரிவிற்கு அமைய 03 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 129,620 தொகையான கடன் 03 தொடக்கம் 09 ஆண்டுகளாக அறவீடு செய்யப்படாது நிலுவையாகக் காணப்படுகின்றன. | விடயங்களை ஆராய்ந்து கடன் நிலுவைகளை அறவீடு செய்யப்பட வேண்டும். | ஜனாப்.M.N.M.முசௌபீக் - 3,000.00, A.H.பிஸ்றுல் ஹாபி - 24,000.00, A.M.சனூாஸ் - 102,620.00 ஆகிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் நிலுவையில் ஜனாப். A.H.பிஸ்றுல் ஹாபி - 24,000.00ரூபா கடன் 2019.04.25ம் திகதி முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.<br>ஜனாப்.M.N.M.முசௌபீக் - 3,000.00ரூபா கடன் அறவீட்டுக்கான கடிதம் மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதும் இற்றை |

| | | |
|---|---|---|
| | | வரை இத்தொகை எமக்கு மீளளிக்கப்படவில்லை. விரைவாக<br><br>இத்தொகை அறவிடப்படும். ருபா 102,620.00 கடனாகப் பெற்ற முகாமைத்துவ உதவியாளர் A.M.சனூாஸ் அவர்கள் பதவியிலிருந்து தானாக விலகிக் கொண்ட நிலையில் மரணித்துள்ளார். இவர் கடன் பெறும்போது 10வருடத்திற்குமேல் நிரந்தர சேவை உடையவராதல் பிணையாளி இல்லாததும் இவருக்கு பின்னுரித்தாளி எவரும் இல்லை என்பதாலும் இவரது கடன் அறவீடு தொடர்பாக உரிய ஆலோசனைகளைப் பெற்று இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதோடு முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கை தங்களுக்கு அவ்வப்போது அறியத்தரப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படும் 07 காரியாலய உதவியாளர்களில் உள்ளக இடமாற்றமானது 03 ஊழியர்களுக்கே தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவருகின்றது. இவ் இடமாற்றங்கள் வழங்கப்படும் போது ஏனைய 04 ஊழியர்களும் கருத்தில் கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. | இடமாற்றங்கள் போது பொறுப்பான முறையில் அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் இவ் இடமாற்றங்கள் தொடர்பாக எமக்கு அறியத்தரவும். | தேவைக்கேற்றவாறும் ஊழியர்களின் சேவை தொடர்பான நடத்தைகளை கவனத்திற்கொண்டே ஏற்கெனவே இடமாற்றமும், தற்காலிக இணைப்புக்களும் வழங்கப்பட்டன. இவ்விடயம் சம்பந்தமாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதுடன், எடுக்கப்பட்ட நடவடிக்கை உரிய வேளைக்கு தங்களுக்கு அறியத்தரப்படும். |

3.4 சொத்து முகாமைத்துவம்

3.4.1 உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக் கொள்ளப்பட்ட 12 மோட்டார் வாகனங்கள் 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த வாகனங்கள் கிழக்கு மாகாண தலைமைச் செயலகம் மற்றும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை போன்ற நிறுவனங்களிடமிருந்தே அன்பளிப்பாக பெறப்பட்டது. இவற்றுள் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட வாகனங்களுக்கான உரிமை மாற்றப் படிவங்கள் ஒப்பமிட்டு சபையின் பெயருக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எனது MUPS/WP/RMP/2017ம் இலக்க, 2017.10.25ம் திகதிய கடிதம்மூலம் வாகனச் சொந்தமுடைவர்களின் விபரங்கள் அறிவதற்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இற்றைவரை அதற்கான ஆவணங்கள் பெறுவதில் இடர்பாடுகள் உள்ளது என்பதை அறியத்தருவதுடன் இவ் உரிமம் சம்பந்தமான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என்பதுடன் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தங்களுக்கு அறியத்தரப்படும். |

3.4.2 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானங்களைப் பெறத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தோப்பூரில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் காணப்படும் அறை ஒன்றினை 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மின்சார சபையின் உப அலுவலகம் இயங்குவதற்கு வழங்கப்பட்டிருந்த | இவ்விடயம் தொடர்பாக எவ்வித கோவைகளும் சபையில் இல்லை என்பதுடன் உடன்படிக்கை மேற்கொண்டு வருமானம் உழைக்க நடவடிக்கை | தோப்பூரில் மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ள கட்டடம் சம்பந்தமாக உரிய கோவையை ஆராய்ந்து துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் |

| | | |
|---|---|---|
| போதிலும் இன்று வரை எவ்வித உடன்படிக்கையும் செய்யப்பட்டு வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | எடுக்கப்படுதல் வேண்டும். | அவைபற்றி அவ்வப்போது தங்களுக்கு அறியத்தரப்படும். |

### 3.4.3 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் Pickup வாகனங்கள் திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்டிருந்தும் 02 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றை ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய வாகனங்களைப் பயன்படுத்துவதுடன் திருத்தம் செய்யக்கூடிய நிலையில் இல்லாத வாகனங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட வேண்டும். | Pickup வாகனத்திற்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட செலவினம் அதிகமாகக் காணப்பட்டதனாலும், இவ்வாகனம் மிகப் பழைமை வாய்ந்ததாலும், இனிவரும் காலங்களில் இதன் பராமரிப்புச் செலவு அதிகரிக்கலா மென்பதாலும், கிழக்கு மாகாண இயந்திரப் பொறியியலாளர் ஊடாகப் பெற்ற திருத்த வேலைக்கான மதிப்பீட்டுக்கமைவாக கடந்த 2018.02.01ம் திகதிய எனது MUPS/FD/Quo/2018ம் இலக்க கூறுவிலையை மீள்மதிப்பீடு செய்யும் போது ரூபா 01 மில்லியனுக்கு மேல் செலவு ஏற்பட வாய்ப்புள்ளதாலும் இவ்வாகனத்தை திருத்தம் செய்யாது பெறப்பட்ட நிறுவனத்திற்கு மீள ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், 2 உழவு இயந்திரங்களும் விரைவாக மேற்கொள்ளப்பட்டு அதனை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

3.5 பெறுகை

---------------

3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை நிதியைப் பயன்படுத்தி வள்ளிக்கேணி பிரதான வீதி நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 1,926,960 தொகைக்கு வளர்மதி சனசமூக நிலையத்திற்கு 2017 ஒக்தோபர் 30 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வேலை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2017 திசெம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபையிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 20 வரை ரூபா 354,207 தொகைக்கு மக்கி (Mucky) மாத்திரமே இடப்பட்டு இருந்தது. மேலும் சபை சரியான தகைமையுடைய ஒப்பந்தக்காரரை ஆரம்பத்திலேயே தெரிவு ஒப்பந்தத்தை வழங்காது ஒரு சனசமூக நிலையத்திற்கு வழங்கியமையால் இவ் ஒப்பந்தத்தை இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.<br><br>இவ்விடயம் தொடர்பாக கடந்த வருட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் இன்று வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்ட வேலையினை மக்களுக்கு பயனளிக்கத்தக்க வகையில் நிறைவு செய்யப்படல் வேண்டும். | சனசமுக நிலையத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் ரூபா. 02மில்லியனுக்கு உட்பட்ட வேலைகளை அபிவிருத்திப் பணி மேற்கொள்ளப்படும் பிரதேசத்திலுள்ள சனசமுக நிலையத்திற்கு வழங்கப்படுகிறது. அந்தவகையில் வள்ளிக்கேணி பகுதியிலுள்ள வளர்மதி சனசமுக நிலையத்திற்கு குறித்த வேலை வழங்கப்பட்டது. ஒப்பந்த காலப்பகுதியில் அதிகரித்த மழை காரணமாக மக்கி, மற்றும் கிரவல் பெற முடியாமல் இருந்ததாலும், இக்காலப் பகுதியில் மணல், கிரவல் எடுப்பதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும் இவ்வேலைக்கான மணல், கிரவல்களைப் பெறுவதில் பாரிய இடர்பாடுகள் இருந்ததன் காரணமாவே அவ்வேலை டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்டது. இதனை தொடர்வேலையாக மேற்கொள்வதற்கு கடந்த 2019.01.17ம் திகதி 21ம் இலக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தொடர்நடவடிக்கையாக அவ்வீதியின் மீதி வேலைகள் விரைவாக செய்து முடிக்கப்படும். |